## பத்திரிக்கை செய்தி குறிப்பு

## மானிய விலையில் இரு சக்கர வாகனம் வாங்க உலமாக்கள் விண்ணப்பிக்கலாம்

சென்னை மாவட்டத்தில் இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதரப் பணியாளர்கள், தர்காக்கள் மற்றும் அடக்கத்தலங்கள், தைக்காக்கள் ஆஷீர்கானாக்கள் மற்றும் முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்களின் பொருளாதார மற்றும் கல்வி நிலைகள் முன்னேற்றம் அடைவதற்காக உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு அமைப்பு சாரா வாரியத்தில் வழங்கப்படுவது போன்று இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறன்றன.

"தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில்" பதிவு செய்யப்பட்ட சென்னை மாவட்டத்திலுள்ள 247 வக்ஃபு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்கள் தங்கள் சமயப்பணிகளை சிறப்பாகவும், செம்மையாகவும் ஆற்றுவதற்கு மானிய விலையில் புதிய இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் செயல்படுத்தபடவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தகுதியான நபர்களுக்கு வாகனத்தின் மொத்த விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.25,000/– மானியாக வழங்கப்படும். வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் மானிய உதவி கோரி விண்ணப்பம் செய்தால், 1. பேஷ் இமாம், 2. அரபி ஆசிரியர்கள் 3. மோதினார் 4. முஜாவர் என்ற முன்னுரிமை அடிப்படையில் ஒருவருக்கு மட்டும் மானியத் தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற தமிழ்நாட்டில் வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃபு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் நாளில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும். தமிழ்நாட்டை சார்ந்தவராகவும், வயது 18 முதல் 40 வயதுக்கு உட்பட்டவராகவும், இருசக்கர வாகனம் ஓட்டுநர் கற்றுணர்வு சான்று (LLR) அல்லது ஓட்டுநர் உரிமம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். தகுதி வாய்ந்த நபர்கள் எண்.62, இராஜாஜி சாலை, சிங்காரவேலர் மாளிகை, சென்னை–01 என்ற முகவரியில் செயல்படும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுமாறும் அல்லது https://chennai.nic.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து இவ்வலுவலகத்தில் ஆகஸ்ட் வருகிற 25–ஆம் தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்குமாறும், மேலும் விவரங்களுக்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்படி திட்டத்தின் மூலம் பயன்பெறுமாறு சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

27/7/21

மாவட்ட ஆட்சித்தலைவர்
சென்னை மாவட்டம்–01

23/7/2021 ம.செ.தொ.அ 23/7/21

மா.பி.(ம) சி.ந.அ 23.7.2021

## தமிழ் நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களில் பணிபுரியும் உலமாக்களுக்கு புதிய இரு சக்கர வாகனம் வாங்க மானியம் அறித்தல்

## விண்ணப்பப் படிவம்

மாவட்டம்

புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1 | பயனாளியின் பெயர் | |
| 2 | தந்தையின் பெயர் | |
| 3 | குடியிருப்பு முகவரி | |
| 4 | தொலைப்பேசி/அலைப்பேசி எண் | |
| 5 | ஆதார் அட்டை எண் | |
| 6 | வாக்காளர் அட்டை எண் | |
| 7 | குடும்ப அட்டை எண் (Ration Card) | |
| 8 | பிறந்த தேதி மற்றும் வயது | |
| 9 | பணிபுரியும் பதிவு செய்யப்பட்ட வக்ஃபு நிறுவனத்தின் பதிவு எண்/பெயர் மற்றும் முழு முகவரி | |
| 10 | பணியின் பெயர் | உலமாக்கள் பேஷ் இமாம்/அரபி ஆசிரியர்/மோதினார்/முஜாவர் |
| 11 | பணியில் சேர்ந்த நாள் | |
| 12 | விண்ணப்பிக்கும் நாளில் எத்தனை ஆண்டுகள் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. | |
| 13 | பயனாளி மாற்றுத்திறனாளியா ? ஆம் /இல்லை | |
| 14 | ஓட்டுநர் உரிமம் எண் வழங்கப்பட்ட நாள் | |
| 15 | வாகன பதிவு எண் மற்றும் பதிவு செய்யப்பட்ட நாள் | வாகன பதிவு எண்:<br>நாள் : |
| 16 | வாகனம் சொந்த நிதியில் வாங்கப்பட்டிருப்பின் பயனாளியின் வங்கி சேமிப்புக் கணக்கு விவரம் அல்லது நிதி நிறுவனத்தின் மூலம் கடனாக பெற்றிருப்பின் பயனாளியின் பெயரிலான கடன் கணக்கு விவரம் | வங்கி கணக்கு எண் :<br>வங்கியின் பெயர் :<br>கிளையின் பெயர் :<br>IFSC குறியீடு எண் : |
| 17 | வாகனத்தின் மொத்த விலை (காப்பீடு சாலை வரி உட்பட | |
| 18 | கோரப்படும் மானியத் தொகை (வானத்தின் மொத்த விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 25,000/– மட்டும் வழங்கப்பட வேண்டும் | |

| | | |
|---|---|---|
| 19 | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றவரா (ஆம் எனில் அடையாள அட்டை எண்) | |
| 20 | இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | |
| 1 | ஆதார் அட்டை | |
| 2 | ஓட்டுநர் உரிமம் / LLR (learner License Registration) | |
| 3 | கல்வி தகுதிச் சான்றிதழ் (குறைந்தபட்சம்) 8 ஆம் வகுப்பு தேர்ச்சி /தோல்வி | |
| 4 | வங்கி கணக்கு எண் மற்றும் (FSC) குறியீடுடன் கூடிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் | |
| 5 | பணிபுரியும் நிறுவனத்தின் அடையாள அட்டை (இருப்பின் ) | |
| 6. | வாகனம் வாங்குவதற்கான விலைப்பட்டியல் / விலைப்புள்ளி | |
| 7 | வாக்காளர் அடையாள அட்டை | |
| 8. | குடும்ப அட்டை (Ration Card) | |
| 9. | பணிச்சான்று | |

<u>உறுதிமொழி</u>

1. மேலே சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து தகவல்களும் மற்றும் ஆவணங்களும் உண்மை என உளமார உறுதியளிக்கிறேன்.
2. நான், அரசு வழங்கும் மானியத்தின் மூலம் கியர் இல்லாத / ஆட்டோ கியர் உள்ள இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு என்னுடைய ஆதார் எண்ணை பயன்படுத்த தானாக முன்வந்து சமர்ப்பிக்கிறேன்.
3. முழுமையான ஒட்டுநர் உரிமம் எனக்கு விண்ணப்பிக்கும் நாளன்று உள்ளது என்று உறுதியளிக்கின்றேன்.

   (அல்லது)

   LLR (Learner License Registration) பெற்று அதன் அடிப்படையில் விண்ணப்பித்திருந்தால் ஒட்டுநர் உரிமம் பெற்ற பின்னரே மானியத் தொகைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பேன் என உறுதியளிக்கிறேன்.

4. அரசின் மானிய உதவியுடன் பெறப்பட்ட இரு சக்கர வாகனத்தை 5 ஆண்டுகள் வரை உரிமம் மாற்றம் வேறு ஒருவருக்கு மாற்றவோ அல்லது விற்கவோ மாட்டேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதார் கையொப்பம்

நாள்
இடம்

## இணைப்பு–II

### பணிபுரியும் சான்று வழங்குவதற்கான படிவம்

பணிபுரியும வக்ஃப் நிர்வாக கமிட்டி

தமிழ் நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டு. . . . . . . . . . . . மாவட்டத்தில் வட்டத்தில். . . . . . . . . . . இடத்தில் இயங்கி கிரும் . . . . . பதிவு எண் கொண்ட (வக்ஃப்பின் பெயர்) இல் திரு. . . . . . . . . . . . தந்தை பெயர் திரு. . . . . . . . . . . உலமா/பேஷ் இமாம் அரபி /ஆசிரியர்/ மோதினார்/ முஜாவர் ஆக முதல் பணிபுரிந்து வருகிறார். இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு அரசு மானியம் கோரி விண்ணப்பிக்கும் நாளில் ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார் எனச் சான்றிடப்படுகிறது.

முத்தவல்லி
வக்ஃப் நிறுவனத்தின் பெயர்
முழு முகவரி மற்றும் பதிவு எண்

அலுவலக முத்திரை

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டு . . . . . . . . . . . . மாவட்டத்தில் . . . . . . . . . . . . வட்டத்தில் . . . . . . . . . . . . இடத்தில் இயங்கி வரும் . . . . . . . . . . . . பதிவு எண் கொண்ட . . . . . . . . . . . . உலமா பேஷ் இமாம் அரபி /ஆசிரியர் /மோதினார் முசுவர் ஆக . . . . . . . . . . . . . முதல் பணிபுரிந்து வருகிறார். இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு அரசு மானியம் கோரி விண்ணப்பிக்கும் நாளில் . . . . . . . . . . . . ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார் என்பது தொடர்பாக முத்தவல்லி அளித்த மேற்படி விவரங்கள் சரிபார்க்கப்பட்டு சரியாக உள்ளது எனச் சான்றிடப்படுகிறது. இவருக்கு இரு சக்கர வாகனம் வாங்க அரசு மானியம் வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

வக்ஃப் கண்காணிப்பாளர்
மாவட்டம்

அலுவலக முத்திரை